தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1980 ஜூன் 26

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எத்தகைய செய்தியாக இருந்தாலும் அதனை யார் சொல்லக் கேட்டாலும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அல்லது இகழ்ந்து தள்ளாமல், அதன் உண்மையை ஆராய்வதே அறிவாகும்.

1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. எம். மருதநாயகம் பிள்ளை மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். மருதநாயகம் பிள்ளை அவர்கள் 25—4—1980 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். மருதநாயகம் பிள்ளை அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை மதுரை மாவட்டம் வட மதுரைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS